16.11.2023
அசல் வழக்கு எண்: 177/2014

வா.சா.1 சாட்சி சக்கையா இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனது தகப்பனார் பெயர் சக்திவேல் என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் சங்கிலித்தேவர் என்றால் சரிதான். சங்கிலித்தேவருக்கு எத்தனை மக்கள் என்றால் ராமர், கண்ணையா மற்றும் சக்திவேல் ஆகிய 3 ஆண் மக்கள் மற்றும் அக்கம்மாள், அழகம்மாள் மற்றும் குருவம்மாள் ஆகிய 3 பெண் மக்கள் ஆவார்கள். சங்கிலித்தேவருக்கு சொந்தமான சொத்துக்கள் அவருடைய வாரிசுகள் ஆன மேற்படி 6 நபர்களுக்குள் பிரிக்கப்பட்டதா என்றால் பிரிக்கப்பட்டது. ஆனால் அதற்கான எழுத்து மூலமான ஆதாரங்கள் எதுவும் இல்லை.

எனது தகப்பனாருக்கு என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் ஒரு தோட்டமும், சர்வே எண். 112/8 ல் உள்ள 25 செண்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. தாவா சர்வே எண்ணான 112/8 ல் உள்ள 25 செண்டிற்கும் எனது தகப்பனார் பெயரில் பட்டா உள்ளதா என்றால் உள்ளது. அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 5 ஆவணம்தான் அந்த சொத்திற்கான பட்டா என்றால் சரிதான். அந்த பட்டாவில் யார் யார் பெயர் உள்ளது என்றால் சங்கிலித்தேவர் மகன் சக்திவேல் மற்றும் ராமசாமிதேவர் மனைவி பெருமாளம்மாள் ஆகிய பெயர்கள் உள்ளன. மேற்படி வா.சா.ஆ 5 ஆவணம் 25 செண்டிற்கான ஆவணம் என்றால் சரிதான்.

மேற்படி ஆவணத்தில் ராமசாமிதேவர் மனைவி பெருமாளம்மாள் என்பவருடைய பெயர் எதன் அடிப்படையில் உள்ளது என்றால் அது பற்றி

எனக்கு தெரியாது. அவரது பெயரை நீக்கம் செய்வதற்கு வருவாய்துறையில் நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் எடுத்தேன். அதில் உத்தரவு எதுவும் ஏற்பட்டுள்ளதா என்றால் அதனை தொடர்ச்சியாக கண்காணிக்க இயலவில்லை. மேற்படி வா.சா.ஆ. 5 ஆவணத்தை தவிர எனது தகப்பனார் பெயரில் எந்வொரு ஆவணமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பெருமாளம்மாள் என்பவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர் யார் என்று எனக்கு தெரியாது.

எனது தாத்தா சங்கிலிதேவருக்கு மேற்படி 25 செண்டு கிரைய பாத்தியம் என்று சொல்வதும் அது எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டது என்று சொல்வதும் தவறு என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 1 ஆவணத்தில் சர்வே எண். 112/8 ல் உள்ள 40 செண்டில் கீழ்புறம் உள்ள 5 செண்டை எனது தாத்தா கிரையம் வாங்கியதாக உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ 3 கிரைய ஆவணத்தில் சர்வே எண். 112/8 ல் உள்ள 40 செண்டில் மேல்புறம் உள்ள 15 செண்டை எனது தாத்தா கிரையம் வாங்கியதாக உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் மேற்படி வா.சா.ஆ 3 ஆவணத்தில் மேற்படி 15 செண்டிற்கு கிழக்குமாலாக சி.பெ.பெருமாள்தேவர் தோட்டம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வழக்குப்படி வா.சா.ஆ. 3 கிரைய ஆவணத்திற்கு முன்பாகவே வா.சா.ஆ. 1 மற்றும் 2 கிரைய ஆவணங்கள் மூலமாக வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 3 ஆவணத்தில் கிழக்குமாலாக எனது தாத்தா பெயர் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் 25 செண்டை எனது தாத்தா கிரையம் பெற்றிருந்தால் வா.சா.ஆ 3 ஆவணத்தில் கிழக்குமாலாக எனது தாத்தா பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல.

எனது தாத்தாவிற்கு கிரையம் கொடுத்த நபர்களுக்கு மேற்படி சொத்துக்கள் சொந்தமானது என்று காட்டுவதற்கு எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் கொடுத்ததுபோல் ஞாபகமாக உள்ளது. சரியாக தெரியவில்லை. வா.சா.ஆ 7 ஆவணத்தில் கண்ட 2 1/2 செண்டு சொத்தும் வா.சா.ஆ 8 ஆவணத்தில் கண்ட 1 1/4 செண்டு சொத்தும் எனது தாத்தா கிரையம் பெற்ற 25 செண்டில் கட்டுப்பட்டதா என்றால் 25 செண்டில் கட்டுப்படாத சொத்து ஆகும்.

தாவா வழக்கை எத்தனை செண்டு சொத்திற்கு தாக்கல் செய்துள்ளன என்றால் 2 செண்டு 80 ச.அடிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மொத்தமுள்ள 25 செண்டில் தாவா சொத்து எந்த பகுதியில் கட்டுப்பட்டுள்ளது என்றால் கிழக்கு பக்கம் உள்ளது. தாவா சொத்திற்கு மேற்கே உள்ள சொத்துக்கள் யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் எனது அனுபவத்தில் உள்ளது.

எனது அப்பா சக்திவேல் எந்த வருடம் காலமானார் என்றால் 2013 ம் வருடம் இறந்தார். எனது அப்பா இறக்கும்போது யார் யார்ரெல்லாம் அவருக்கு வாரிசாக இருந்தார்கள் என்றால் எனது அம்மா குமராயியம்மாள், நான் மற்றும் அழகம்மாள், பழனியம்மாள் ஆகிய 2 தங்கைகளும் இருந்தோம். நான் இந்த வழக்கை தாக்கல் செய்தபோது எனது அம்மாவையும், சகோதரிகளையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது அம்மாவும், சகோதரிகளும் அவர்களுக்கு உரிய சொத்துக்களை பொறுத்து பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மூலம் விடுதலை பத்தியம் எதுவும் எனக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது தாயாரையும், சகோதரிகளையும் தரப்பினர்களாக சேர்க்காமல் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல

என்றால் சரியல்ல.

சர்வே எண். 112/8 சொத்தில் மொத்த விஸ்தீரணம் 40 செண்டு என்றால் சரிதான். மேற்படி 40 செண்டு சொத்திற்கு 24 நபர்கள் பெயரில் கூட்டுப்பட்டா ஏற்பட்டு இருந்தது என்றால் சரிதான். அதில் எனது தாத்தா பெயரும், பிரதிவாதிகளின் முன்னோர்கள் பெயரும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா தவறு என்றும் அதனை ரத்து செய்யவேண்டும் என்றும் நான் உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியரிடம் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனுவின் மீது உத்தரவு ஏற்பட்டதா என்றால் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்ய சொல்லி தள்ளுபடி ஆகிவிட்டது. மேல்முறையீடு தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். அந்த மனுவில் மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

எனது தாத்தா சங்கிலிதேவருக்கு சர்வே எண். 112/8 ல் கண்ட 40 செண்டில் உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண். 112/8A ல் கண்ட 20 1/2 செண்டில் மேல்புறம் உள்ள 6 1/2 செண்டு மட்டும்தான் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அதில் கிழக்கே உள்ள 14 1/2 செண்டு சின்னப்பழனியாண்டிதேவர் மக்கள் நாராயணத்தேவர், சுப்பையாதேவர் மற்றும் பெருமாள்தேவர் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. சுப்பையாதேவர் என்பவருக்கு வாரிசுகள் இல்லாததால் மேற்படி 14 1/2 செண்டு சொத்தை நாராயணத்தேவரும், பெருமாள்தேவரும் பிரித்துகொண்டார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு பிரிக்கப்பட்டபோது கிழ்புறம் உள்ள 7 செண்டு பெருமாள்தேவருக்கும், மேல்புறம் உள்ள 7 செண்டு நாராயணதேவருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கிழ்புறம் உள்ள 7 செண்டை குருசாமிதேவரும், அவரது சகோதரர்கள் பழனியாண்டிதேவரும் பிரித்துகொண்டார்கள் என்றால் சரியல்ல.

குருசாமிதேவர் என்பவருடைய மகன்தான் 2ம் பிரதிவாதி பெருமாள் என்றால் அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. பெருமாள் என்பவருடைய மகன்தான் 1ம் பிரதிவாதி லெட்சுமணன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு உரிமை ஏற்பட்டதால்தான் அவருடைய மகனான 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை 15.06.2010 தேதியிட்ட தான செட்டில்மெண்டு ஆவணம் மூலம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிகள் 1988ம் வருடத்தில் ஒரு மண் மெச்சி வீடு கட்டி இடிந்துவிட்டது என்றால் சரியல்ல.

தான செட்டில்மெண்டு அடிப்படையில் 2011ம் ஆண்டு தாவா சொத்தில் 1 ம் பிரதிவாதி காரவீடு கட்டியுள்ளார் என்றால் கட்ட ஆரம்பித்தார்கள் அப்போதுதான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் கண்ட சொத்து விபரத்தில் வீடு இருப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். வாரிசுகளை சேர்த்து பிராது திருத்தம் செய்யப்பட்ட காலத்திலும் எவ்வளவு விஸ்தீரணத்தில் வீடு கட்டப்பட்டுள்ளது என்பது சம்பந்தமாக திருத்தம் செய்யவில்லை என்றால் சரிதான்.

தாவா சொத்து கிராமநத்தம் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை படித்துபார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். தாவா சொத்து உட்பிரிவு செய்யப்படாததால் தனிப்பட்டு அளக்கமுடியவில்லை என்றும் அதனால் மொத்த சொத்தையும் அளந்து அறிக்கை தாக்கல் செய்வதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண். 112/8A வில் உள்ள 20 1/2 செண்டில் மேல்புறம் உள்ள 6 1/2 செண்டிற்கு வேலி போடப்பட்டுள்ளதாக அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு கிழக்கே உள்ள பகுதி காலியாக உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது

என்றால் சரிதான். அதை நான்தான் பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி காலி இடத்திற்கும் கிழக்கு பகுதியில் 1ம் பிரதிவாதி கட்டியுள்ள வீடு உள்ளது என்றால் சரிதான். நான் கோரியுள்ள விளம்புகை பரிகாரமும், சுவாதினமீட்பு பரிகாரமும் எனக்கு கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராது தவறாது என்றால் சரியல்ல.